## நிர்மலா சீதாராமனின் கணவர் எழுதிய புத்தகம்

# ‘பா.ஜ.க.வை வீழ்த்தும்’ ஆயுதமாகுமா?

முரளிதரன் காசிவிஸ்வநாதன்
பி.பி.சி. செய்தியாளர்

**ராமநாதபுரத்தில் கூட்டம் ஒன்றில் பேசிய முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனின் கணவர் பரகலா பிரபாகர் எழுதிய ‘The Crooked Timber of New India‘ என்ற நூலை மத்திய பா.ஜ.க. அமைச்சர்கள் அனைவரும் படிக்க வேண்டுமென்று குறிப்பிட்டார். அந்தப் புத்தகம் பா.ஜ.க. பற்றிக் கூறுவது என்ன?**



ராமநாதபுரத்தில் நடைபெற்ற தென் மண்டல வாக்குச்சாவடி முகவர் பயிற்சிப் பாசறைக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், மத்தியில் ஆளும் பா.ஜ.க. அரசைக் கடுமையாகச் சாடினார். தொடர்ந்து பேசிய முதலமைச்சர், நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனை முன்வைத்து பா.ஜ.கவை கடுமையாக விமர்சித்தார்.

“இப்போதுதான் சகோதரி கனிமொழி சொன்னதால், சிலப்பதிகாரம் என்ற புத்தகத்தின் முன்னுரையைப் படிக்க ஆரம்பித்திருக்கிறார் நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன். அதை அவர் முழுமையாகப் படிக்க வேண்டும். ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பிறகு, ஓய்வு கிடைக்கும். அப்போது முழுமையாகப் படிக்க நேரம் கிடைக்கலாம்.

ஆனால், அதற்கு முன்பு நிதியமைச்சரின் கணவரான டாக்டர் பரகலா பிரபாகர் எழுதிய ‘The Crooked Timber of New India‘ என்ற புத்தகத்தை ஒன்றிய பா.ஜ.க. அமைச்சர்கள் அனைவரும் படிக்க வேண்டும். மீண்டும் பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தால் அது நாட்டுக்குப் பேரழிவாக இருக்கும் என்று சொல்கிறார் நிதி அமைச்சரின் கணவர் பரகலா பிரபாகர்,” என்று குறிப்பிட்டார்.



### யார் இந்த பரகலா பிரபாகர்

பரகலா பிரபாகர் பரவலாக மதிக்கப்படும் அரசியல் பொருளாதார நிபுணர். ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்திலும் லண்டன் ஸ்கூல் ஆஃப் எகனாமிக்ஸிலும் படித்த பிரபாகர், ஆந்திர முதலமைச்சரின் தகவல் தொடர்பு ஆலோசகராக இருந்தவர். இவரது மனைவி நிர்மலா சீதாராமன், பா.ஜ.கவை சார்ந்தவராக இருந்தபோதும் பரகலா பிரபாகர், காங்கிரஸ் ஆதரவு நிலைப்பாட்டைக் கொண்டவர்.

கடந்த சில ஆண்டுகளாக பரகலா பிரபாகர் மத்திய பா.ஜ.க. அரசைக் கடுமையாக விமர்சித்து எழுதி வருகிறார். 2020ஆம் ஆண்டிற்கும் 2022ஆம் ஆண்டிற்கும் இடையில் இவர் எழுதிய கட்டுரைகள் தொகுக்கப்பட்டு, ‘The Crooked Timber of New India: Essays on a Republic in Crisis’ என்ற பெயரில் சமீபத்தில் நூலாக வெளியானது.

மொத்தமாக 22 கட்டுரைகளைக் கொண்ட இந்தப் புத்தகம், பா.ஜ.க. தலைமையிலான கடந்த ஒன்பதாண்டு ஆட்சி குறித்து கடுமையான விமர்சனங்களை முன்வைக்கிறது.

நரேந்திர மோடி அமித் ஷா தலைமையின் கீழ் பா.ஜ.க. வந்த பிறகு அந்தக் கட்சி அடைந்திருக்கும் மாற்றம், அக்கட்சி ஆட்சிக்கு வந்த பிறகு இந்தியா அடைந்திருக்கும் மாற்றம், இந்தியாவில் ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் பரவல், மக்கள் தொகையை வைத்து பா.ஜ.க. செய்யும் அரசியல், இந்தியாவில் உள்ள வேலையில்லா பிரச்னை, ஹிஜாப் விவகாரம், ஆக்ஸ்ஃபாம் அறிக்கை, ஸ்டான் ஸ்வாமியின் மரணம், விவசாய சட்டங்கள், லக்கிம்பூர் கேரி சம்பவம், கோவிட் பரவலை அரசு கையாண்ட விதம் எனப் பல்வேறு விஷயங்களை முன்வைத்து அரசைக் கடுமையாக விமர்சிக்கிறது இந்தப் புத்தகம்.

இந்தப் புத்தகத்தின் மையக் கருத்து, இந்தியா தற்போது அரசமைப்பைக் காப்பாற்றுவதில் துவங்கி பல்வேறு சவால்களை எதிர்கொள்கிறது; இந்த நிலைக்கு இந்தியா எப்படி வந்தடைந்தது என்பதைத்தான் பல்வேறு கட்டுரைகளின் மூலமாகச் சொல்கிறார் பரகலா பிரபாகர்.

“இப்போதுதான் சகோதரி கனிமொழி சொன்னதால், சிலப்பதிகாரம் என்ற புத்தகத்தின் முன்னுரையைப் படிக்க ஆரம்பித்திருக்கிறார் நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன்” எனப் பேசினார் முதலமைச்சர் மு.க ஸ்டாலின்



புத்தக ஆசிரியர்
பரகலா பிரபாகர்

### பா.ஜ.க.வை கடுமையாக விமர்சிக்கும் கட்டுரைகள்

‘இந்தியாவை இதற்கு முன்பு ஆட்சி செய்த கட்சிகள் அரசியல் சாசனம் வலியுறுத்தும் கொள்கைகளைப் பரப்பாதது, அந்த அடிப்படைகளை யாராலும் அசைக்க முடியாது என்ற அலட்சியத்தில் இருந்தது, அவற்றைப் பாதுகாக்கப் பெரிதாக ஏதும் செய்ய வேண்டியதில்லை என்று நினைத்தது ஆகியவை இன்றைய இந்த நிலைக்குக் காரணம்.’

கடந்த பத்தாண்டுகளில் பல்வேறு பிரிவுகளில் இந்தியா பின்னடைவைச் சந்தித்ததாக குற்றம் சாட்டுகிறது இந்தப் புத்தகம். 1990களில் புதிய பொருளாதாரக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்ட பிறகு, இந்தியாவில் ஏழைகளின் எண்ணிக்கை குறைந்துவந்த நிலையில், அந்த நிலைமை தற்போது மாறி வருவதாகக் குறிப்பிடுகிறார் அவர்.

கடந்த 2021ஆம் ஆண்டில் மட்டும் புதிதாக 7.5 கோடி பேர் ஏழைகளாகியிருப்பதாக பிரபாகர் கூறுகிறார். யுஎன்டிபியின் உலக மனித வளர்ச்சி தரவரிசைப் பட்டியலில் இந்தியா 132வது இடத்திற்கு தள்ளப்பட்டிருப்பதையும் உலகப் பட்டினிக் குறியீட்டில் 107வது இடத்தில் இருப்பதையும் அவர் சுட்டிக்காட்டுகிறார்.

கடந்த 2016ஆம் ஆண்டுக்குப் பிறகு, வேலைவாய்ப்பு குறித்த புள்ளிவிவரம் எதையும் மத்திய அரசு வெளியிடவில்லை என்பதைச் சுட்டிக்காட்டும் பிரபாகர், அதற்கு ஒரு காரணத்தைச் சொல்கிறார். அதாவது 201516ஆம் ஆண்டுக்கான வேலைவாய்ப்பின்மை புள்ளி விவரத்தில் கடந்த ஐந்தாண்டுகளில் இல்லாத அளவுக்கு வேலை வாய்ப்பின்மை 5%ஆக உயர்ந்திருந்ததே இதற்குக் காரணம் என்கிறார் அவர்.

“மீண்டும் பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தால் அது நாட்டுக்குப் பேரழிவாக இருக்கும் என்று சொல்கிறார் நிதி அமைச்சரின் கணவர் பரகலா பிரபாகர்,” என்று குறிப்பிட்டார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்

ஒருங்கிணைக்கப்பட்ட பொருளாதார சிந்தனையோ, திறம்மிக்க பொருளாதார ஆலோசகர்களோ இல்லாத நிலையில், அரசு மோசமான பொருளாதார ஆலோசகர்களிடம் வீழ்ந்துவிடுகிறார்கள் என்றும், அந்த ஆலோசகர்கள் பண மதிப்பிழப்பு நடவடிக்கை போன்ற பேரழிவை ஏற்படுத்தும் ஆலோசனைகளை அளிக்கிறார்கள் என்றும் குற்றம்சாட்டுகிறார் பிரபாகர்.

கட்டற்ற அதிகாரத்தைத் தேடும் முயற்சியில் ஈடுபட்டுள்ள மத்திய அரசு, எதிர்க்கட்சித் தலைவர்கள், அவர்களைச் சார்ந்தவர்களின் இடங்களில் வரித்துறை அதிகாரிகள் மூலம் ரெய்டு நடவடிக்கைகளை மேற்கொள்வது, அமலாக்கத் துறையினர் அவர்களைப் பிடித்துவைத்து பல மணிநேரம் கேள்வி எழுப்புவது, விசாரணை இன்றி சிறையில் அடைப்பது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகவும் குற்றம்சாட்டுகிறார். அரசின் சொல்படி கேட்காத ஊடக நிறுவனங்களுக்கு வரி அதிகாரிகள் நோட்டீஸ் அனுப்புவதோடு, நிதி முறைகேடுகளுக்காக விசாரணையும் செய்கிறார்கள் என்றும் கூறுகிறார் பிரபாகர்.



நரேந்திர மோதி பிரதமராக வந்த பிறகு சுதந்திர தினங்களின்போது ஆற்றிய உரைகள் பற்றி ஒரு கட்டுரை புத்தகத்தில் இடம் பெற்றிருக்கிறது. புத்தகத்தின் மிகவும் சுவாரஸ்யமான கட்டுரைகளில் இதுவும் ஒன்று. 2014இல் இருந்து 2020 வரை பிரதமர் பேசிய ஏழு சுதந்திர தின உரைகளை முன்வைத்து, அதில் ஆரம்பத்தில் பேசப்பட்ட விஷயங்கள் எப்படி படிப்படியாக மாறின என்பதை விளக்குகிறார் பிரபாகர்.

நரேந்திர மோதி பிரதமராக வந்த பிறகு சுதந்திர தினங்களின்போது ஆற்றிய உரைகள் பற்றி ஒரு கட்டுரை புத்தகத்தில் இடம்பெற்றிருக்கிறது.

### மோடி உரையில் காணாமல் போன டீம் இந்தியா

கடந்த 2014ல் பேசும்போது அடிக்கடி Team India என்று குறிப்பிட்ட பிரதமர், 2016க்குப் பிறகு Team India குறித்துப் பேசுவதே இல்லை என்பது புத்தகத்தில் சுட்டிக்காட்டப்படுகிறது. அதேபோல, 2014ஆம் ஆண்டின் சுதந்திர தின உரையில், “இந்தியா சுதந்திரமடைந்து கடந்த 70 ஆண்டுகளில் பல மகத்தான விஷயங்கள் நடந்திருக்கின்றன” என்று குறிப்பிட்ட பிரதமர், தற்போது “கடந்த எழுபதாண்டுகளில் எதுவுமே நடக்கவில்லை” என்று கூறுவதை எப்படிப் புரிந்துகொள்வது என்கிறார் பிரபாகர்.

புத்தகத்தின் இறுதியில், கோவிட் 19 தொற்றை இந்தியா கையாண்ட விதம் குறித்து ஒரு விரிவான, விமர்சனபூர்வமான சித்திரத்தை முன்வைக்கிறார் பிரபாகர். படிப்பவர் யாரையும் உலுக்கக்கூடிய சித்திரம் அது.

கடந்த ஒன்பது ஆண்டுகளாக ஆட்சியில் உள்ள ஆளும் கட்சியைக் கடுமையாக விமர்சிக்கும் இந்தப் புத்தகம், பிரதான எதிர்க்கட்சியான காங்கிரசின் செயல்பாடுகள், பிற எதிர்க்கட்சிகளின் செயல்பாடுகள் குறித்துப் போதுமான விமர்சனங்களை முன்வைக்க வில்லை.

ஆனால், 2014இல் இருந்து தற்போது வரையிலான பா.ஜ.க. அரசின் ஒவ்வொரு மோசமான அம்சத்தையும் குறிப்பிட்டு, புள்ளி விவரங்களோடு வாதிடுகிறது இந்தப் புத்தகம்.

புத்தகத்தின் இறுதியில், கோவிட் 19 தொற்றை இந்தியா கையாண்ட விதம் குறித்து ஒரு விரிவான, விமர்சனபூர்வமான சித்திரத்தை முன்வைக்கிறார் பிரபாகர்.

“அறிவொளிக் கால ஜெர்மன் தத்துவ மேதையான இம்மானுவேல் கன்ட்டின் புகழ்பெற்ற மேற்கோளில் இருந்து இந்தப் புத்தகத்தின் தலைப்பு எடுக்கப்பட்டிருக்கிறது.

‘கோணலான மரத்திலிருந்து நேரான எதுவும் உருவானதில்லை’ என்பதுதான் அந்த மேற்கோள். புதிய இந்தியாவின் கோணல் மரங்களில் இருந்து நேரான எதுவும் உருவாகப் போவதில்லை என்பதுதான் இந்தப் புத்தகம் சொல்லும் செய்தி. மிகவும் ஆச்சரியம் தரக்கூடிய புத்தகம் இது.

வழக்கமாக புள்ளிவிவரங்களை அடிப்படையாக வைத்து எழுதப்படும் புத்தகங்கள், படிக்க முடியாத வகையில் அலுப்பூட்டும். ஆனால், இந்தப் புத்தகம், மிக சுவாரஸ்யமானது. நிறைய புள்ளி விவரங்கள், தர்க்கங்களோடு, விறுவிறுப்பான நடையில் எழுதப்பட்ட புத்தகம் இது.

எதிர்க்கட்சிகள் இதைத் தங்கள் பிரசாரத்திற்கே பயன்படுத்திக் கொள்ள முடியும். ஆளும் கட்சியால் இதற்குப் பதிலே சொல்ல முடியாது,” என்கிறார் மூத்த பத்திரிகையாளரும் ஃப்ரண்ட் லைன் இதழின் முன்னாள் ஆசிரியருமான ஆர். விஜயஷங்கர்.

கட்சித் தொண்டர்களிடையே முதலமைச்சர் பேசியதைப் பார்க்கும்போது, இந்த நூல் எதிர்க்கட்சிகளுக்கு நல்ல ஆயுதம் என்ற அம்சத்தை தி.மு.க. தரப்பு புரிந்துகொண்டதைப் போலத் தான் தெரிகிறது.

## நிர்மலா சீதாராமன் கணவர் பரகலா பிரபாகர் நூலில் குற்றச்சாட்டு

# பிரதமர் மோடி எல்லாவிதத்திலும் திறனற்றவர் !

## மூத்த பத்திரிகையாளர் விஜய்சங்கர் விமர்சனம்!

**சென்னை, ஆக.21-**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் படிக்க வேண்டும் என்று பரிந்துரைத்த ஆங்கில புத்தகத்தை எழுதியவர் நிர்மலா சீதாராமன் அவர்களின் கணவர் பரகலா பிரபாகர் ஆவார். அந்த புத்தகத்தை தமிழில் மொழி பெயர்ப்பு செய்து வெளியிட இருப்பவர் மூத்த பத்திரிக்கையாளர் விஜய்சங்கர். அவரது சிறப்பு பேட்டியை புதிய தலைமுறை தொலைக்காட்சி வெளியிட்டுள்ளது.**

ஒன்றிய அரசின் தவறான செயல்பாடுகள் குறித்து அறிந்து கொள்ள பொருளாதார நிபுணரான பரகலா பிரபாகர் எழுதிய The Crooked Timber of New India என்ற புத்தகத்தை மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் படிக்க வேண்டும் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கூறியிருந்தார். அந்தப் புத்தகத்தை தமிழில் மொழி பெயர்க்கும் மூத்த பத்திரிகையாளர் விஜய்சங்கர் அவர்கள் புதிய தலைமுறை தொலைக்காட்சி நெறியாளரிடம் தெரிவித்த பல்வேறு கருத்துக்கள் குறித்து இங்கே பார்க்கலாம்.

**செய்தியாளர் ரமேஷ்:** ஆங்கிலத்தில் இருந்து தமிழில் மொழிபெயர்க்கப் படும் அந்த நூலில் என்ன தான் சொல்லி இருக்கிறது..? முதலமைச்சர் அதனை கோட் (quote) செய்கின்ற அளவிற்கு அந்த நூலில் என்ன தான் சொல்லப்பட்டிருக்கிறது?

**மூத்த பத்திரிகையாளர் விஜய்சங்கர்:** அந்தப் புத்தகத்தின் டைட்டில் The Crooked Timber of New India. அப்படி என்றால் புதிய இந்தியா, மோடி ஆட்சிக்கு வந்த பிறகு நாங்கள் புதிய இந்தியாவை படைத்து விட்டோம் என்று 9 வருடங்களாக சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். புதிய இந்தியா என்னும் கோணல் மரம், அப்படி என்றால் என்ன அர்த்தம் என்றால், ஒரு கோணலான மரத்திலிருந்து நேரான பொருளை செய்ய முடியாது. அடிப்படையில் என்ன சொல்ல வருகிறேன் என்றால் இவர்களின் பொருளாதாரம், மதம், சமூகம், அரசியல் பற்றிய எல்லா சிந்தனைகளும் கோணலானது. அதிலிருந்து ஒரு புதிய இந்தியாவைப் படைக்க முடியாது என்று தான் அந்த புத்தகத்தில் சொல்லி இருக்கிறார்.



அதற்கு உதாரணமாக என்ன சொல்கிறார் என்றால், அவர் அந்த நூலில் ஏறக்குறைய 15, 20 சேப்டர்கள் (தொகுதிகள்) எழுதி இருக்கிறார். அதில் முக்கியமானது பொருளாதாரம். பொருளாதாரத்தைப் பற்றி பார்த்தீர்களேயானால், இந்த சில வருடங்களில் இருந்து, உலகத்தில் UNDP என்ற வளர்ச்சி அமைப்பு இருக்கிறது. United Nations Development Programme என்ற அந்த அமைப்பு ஐக்கிய நாடுகள் சபையினுடையது. ரேங்க் பட்டியல் அதாவது நாடுகளின் வளர்ச்சிக்கான தரவரிசைப் பட்டியல். அதில் இந்தியாவின் இடம் 132 இந்தக் காலக்கட்டத்தில் வந்திருக்கிறது. இலங்கை எவ்வளவு என்றால் 73. நமக்கு மேலே இருக்காங்க. சைனாவும் நமக்கு மேலே. இந்தியாவுக்கு கீழே இருப்பது மூன்றே நாடுகள் தான். பாகிஸ்தான், பர்மா, நேபாள் இந்த மூன்றே நாடுகள் தான் இருக்கின்றது.

அதே மாதிரி Employment. வேலை வாய்ப்பு. ஆண்டுக்கு இரண்டு கோடி பேருக்கு வேலை வாய்ப்பு அளிப்பதாக (மோடி) கூறினார். இப்போது வேலைவாய்ப்பில் என்ன இருக்கிறது என்றால், இப்போது வந்திருக்கின்ற Data அதாவது புள்ளி விவரம், அரசின் புள்ளி விவரம் வெளிவந்துள்ளது. அதன்படி பார்த்தால் கடந்த 35 வருடங்களில் இல்லாத அளவிற்கு வேலையின்மை இருக்கின்றது என்று சொல்கிறார்.

இவர்களே சர்வே எடுக்குறாங்க. அரசாங்க நிறுவனங்களே சர்வே எடுக்கிறார்கள். அந்த சர்வே ரிசல்ட் எல்லாமே இவர்களுக்கு எதிராகவே போகிறது. அதாவது, என்னவென்றால் அந்த சர்வே ரிசல்டை வெளியே விட மறுக்கிறார்கள். அந்த புள்ளி விவர ஆய்வு செய்தவர்களை ரிசைன் பண்ண வைக்கிறாங்க. இப்போது கூட ஒருவர் ரிசைன் பண்ணியிருக்கிறார். ஏன் என்றால் இந்த புள்ளி விவரங்கள் வெளியே வந்தால், இவர் (மோடி) மேடையில் நின்று முழங்குகின்ற புதிய இந்தியா பிறக்கவில்லை என்பது தெரிந்து விடும். புதிய இந்தியாவின் நிலைமை பின் நோக்கித்தான் போகின்றது என்பது தெரிந்து விடும். கடந்த பத்து வருடத்தில் இந்திய அரசியலைப் பற்றி புரிந்து கொள்ள வேண்டும் என்பவர்கள் எல்லோரும் இந்தப் புத்தகத்தைப் படிக்க வேண்டும்.

**செய்தியாளர் :** அவர் சிறந்த பொருளாதார அறிஞராகவும் இருந்திருக்கிறார். தெலுங்கானா மாநிலத்தில் கேபினட் ரேங்கில் அட்வைசராகவும் இருந்தி ருக்கிறாரே?

**விஜய்சங்கர்:** அவருடைய (பரகலா பிரபாகர்) அப்பா, அந்தக் காலத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர். ஆயுதம் ஏந்தி போராடியவர் என்ற புதிய விவரம் எனக்கு இன்றைக்குத் தான் தெரியும். அவருடைய அம்மா எம்.எல்.ஏ. வாக இருந்திருக்காங்க. அதைப்பற்றி எல்லாம் சொல்கிறார். இதைப் பற்றியெல்லாம் சொல்லிட்டு, இது கோணல் மரம் என்று ஏன் சொல்கிறேன் என்றால் இது வரை யாரும் சொல்லாத விஷயம். இந்த அரசு Staggeringly inefficient. அதாவது எல்லாவிதத்திலும் மோடி என்பவர் அதிர்ச்சி தரத்தக்க வகையில் திறனற்றவர்.

**செய்தியாளர் :** இந்தப் புத்தகத்திற்கு தமிழில் என்ன பெயர் வைத்து இருக்கிறீர் கள், எப்போது வெளியிடப் போறீங்க?

**விஜய்சங்கர்:** இன்னும் ஒன்று அல்லது ஒன்றரை மாத்தில் வெளிவந்து விடும். அதாவது புதிய இந்தியா என்னும் கோணல் மரம் என்பது தான் தலைப்பு. கோணல் மரம் என்பது நான் சொன்ன மாதிரி சிந்தனையே கோணல் அப்புறம் எப்படி செயலில் நேரடியாக இருக்க முடியும் ..? அது தான் அதன் அடிப்படை.

இவ்வாறு புதிய தலைமுறை தொலைக்காட்சிக்கு மூத்த பத்திரிகையாளர் விஜய்சங்கர் பேட்டியளித்தார்.